## In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.

O.S.No.. 28/2025 தேதி-16.03.2026

(P.W.1) . சுனிதா

**3 முதல் 5 ஆம்பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கின் 2 ஆம் வாதி எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது தம்பி ஆகும். எனது அப்பா பெயர் அம்புரோஸ் ஆகும். வழக்கு பட்டிகை சொத்தானது எனது தாத்தா கொச்சப்பிக்கு சொந்தமானது என்றால் சரிதான். மேற்படி சொத்தின் பட்டா எண் 47/65 என்றால் சரிதான். எனது தாத்தா தற்போது உயிருடன் இல்லை. எனது தாத்தாவிற்கு 4 மகன்கள் ஆவார்கள். அவர்களது பெயர்கள் செல்லப்பன், ரெத்தினமணி, அம்புரோஸ் மற்றும் பால்ராஜ் ஆகும். செல்லப்பன் மற்றும் எனது தகப்பனாரும் இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான். 17.07.2007 அன்று எனது தாத்தா இறந்துவிட்டதால் வாரிசுதாரர்களான மேற்படி 4 மகன்களும் A, B,C, D என 4 பாகங்களாக பாகம் பிரித்து கொண்டனர் என்றால் சரிதான். மேற்படி சொத்துதான் வழக்கு பட்டிகை சொத்து என்றால் சரிதான். எ பட்டிகை சொத்து செல்லப்பன் என்பவருக்கும் பி பட்டிகை சொத்து ரெத்தினமணி என்பவருக்கும் சி பட்டிகை சொத்து எனது அப்பா அம்புரோஸ் என்பவருக்கு உரிமைப்பட்டது என்றால் சரிதான். டி பட்டிகை சொத்து பால்ராஜ் என்பவருக்கு என்றால் சரிதான்.

வழக்கு பட்டிகை சொத்தானது 2 1/2 சென்டாகும். அதை 4 பாகங்களாக 625 சதுர லிங்ஸ் ஆக பிரிக்கப்பட்டது என்றால் சரிதான். எனது தாயார் தங்க லெட்சுமி 16.05.2022 அன்று இறந்துவிட்டார் என்றால் சரிதான். அதன்படி 2 ஆம் வாதியும் நானும் வழக்கு பட்டிகை சொத்தை உரிமைதாரர்களாக அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். பி பட்டிகை சொத்தை மேற்படி ரெத்தினமணி என்பவர் ஆவண எண் 2834/2011 படி 2 ஆம் பிரதிவாதியான டார்தி என்பவருக்கு விற்பனை செய்தார் என்றால் சரிதான். பி பட்டிகை சொத்து எ பட்டிகை சொத்திற்கு தெற்கு பக்கமாக உள்ளது என்றால் சரிதான். 2 முதல் 5 பிரதி வாதிகள் தகப்பனார் செல்லப்பன் 25.06.2007 அன்று இறந்ததால் அதன்பிறகு எ பட்டிகை சொத்தை 2 முதல் 5 பிரதிவாதிகள் அனுபவித்து வருகிறார்கள்எ ன்றால் சரிதான். சி பட்டிகை சொத்து மற்றும் பி பட்டிகை சொத்திற்கு தெற்கு பக்கமாக பிரதிவாதியின் டி பட்டிகை சொத்திற்கு வடக்கிலும் உள்ளது என்றால் சரிதான்.

3 முதல் 5 ஆம் பிரதிவாதிகளின் எ பட்டிகை சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரிதான். 2 முதல் 5 ஆம் பிரதிவாதிகள்தான் எ பட்டிகை சொத்தின் உரிமைதாரர்கள் என்றால் சரிதான். 2 முதல் 5 பிரதிவாதிகள் எ பட்டிகை சொத்தின் உரிமைதாரர்களாக தீர்ப்பு வழங்க எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்றால் சரிதான்.